பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 29 வெள்ளிக்கிழமை 13.05.2022 கதிர் 82

## ‘மொட்டு’ எம்.பிக்களுடன் ஜனாதிபதி நாளை பேச்சு

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நாளை முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசும் கலைந்தது. இந்நிலையில் புதிய

☞2

## அலரிமாளிகையில் கடமைகளை பொறுப்பேற்றார் பிரதமர் ரணில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் அலுவலகத்தில் இன்று தனதுகடமைகளைப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கையின் 26 ஆவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று மாலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு - கோட்டை

☞2

## ரணிலை நேரில் சந்தித்து வாழ்த்திய இந்தியத் தூதர்

### பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் பேச்சு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடமையை இன்று பொறுப்பேற்ற கையோடு, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தல்,

☞2

# மீண்டும் மொட்டுக் கட்சியே ஆட்சி பிரதமர் பதவியில் மட்டுமே மாற்றம்



## ரணிலை ஆதரிக்க எதிரணி மறுப்பு சுயாதீன அணியினரும் கைவிரிப்பு

### எனினும் புதிய அரசுக்கு 117 எம்.பிக்கள் ஆதரவு

**கொழும்பு,மே13**

**புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தமது அரசுக்கு நாடாளுமன்றத்தில் தாராளமான பெரும்பான்மை ஆதரவு இருப்பதாகக் கூறிக் கொண்டாலும், போதிய பெரும்பான்மையை அவர் திரட்டி கொள்வது தொடர்ந்தும் பெரும் இழுபறியாக இருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை நடத்தும் பேச்சில்தான் பிரதமர் ரணிலின் அரசு தப்பிப் பிழைப்பதற்கான பெரும்பான்மை கிட்டுமா என்ற முடிவு தங்கியிருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.**

☞2

## ரணிலின் அரசில் பதவி வேண்டாம்

### மைத்திரி அணி திட்டவட்டம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் எந்தவொரு பதவியையும் ஏற்காமல் இருப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று கட்சி தலைமையகத்தில் கூடியது.

☞2

## ரணிலின் அரசில் இணையமாட்டோம்

### சஜித் அணி அறிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழுள்ள அரசில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும்தாம்பொறுப்பேற்கத் தயாராக இல்லை என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதன்படி தமது கட்சியில் உள்ள எந்தவொரு எம்.பியும் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று விசேட ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க

☞2

## மதுபானசாலைகள் மே 15, 16இல் மூடல்

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கு இலங்கை மதுவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, மேற்படி தினங்களில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறிச் செயற்படும் உரிமம்பெற்றமதுபானசாலைகளுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று மதுவரி ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

## வெசாக் தினத்தில் மின் தடை இல்லை

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தால் வாகன நெரிசல்

கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியின் மஹாபாகே சந்திக்கு அருகில் இன்று பகல் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

எரிவாயு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால் இவ்வாறு கொழும்பில் இருந்து நீர்கொழும்பு வரை கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

## ரூபாவின் பெறுமதி அதிகரித்தது

புதிய பிரதமராக நேற்று ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றமையை அடுத்து இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமாக உயர்ந்தது.

நேற்றுவரை ஒரு டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி உத்தியோகபூர்வ ரீதியில் 377 ரூபா 50 சதமாக இருந்தது. அது இன்று காலையில் 364 ரூபா 98 சதமாக அதிகரித்தது. வெளிச்சந்தையில் டொலரின் பெறுமதி இருபது ரூபா வரை இன்று வீழ்ச்சி கண்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## போதை மாத்திரைகளுடன் மல்லாகம் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் இரு கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் போதையூட்டும் 300 மாத்திரைகளுடன் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழைபொலிஸாருக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞனை கைது செய்த பொலிஸார், அவரது உடைமையில் இருந்து போதை பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## மீண்டும் மொட்டுக் கட்சியே ஆட்சி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதுள்ள நிலையில் தனித்து ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே புதிய பிரதமருடன் அரசைத் தனித்துக் கொண்டு நடத்த வேண்டியிருக்கும் எனத் தெரிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளடங்கலான புதிய அரசுக்கு ஆதரவளிக்க போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட ஊடகவியலாளர் மாநாடு இன்று முற்பகல் கொழும்பில்நடைபெற்றது. இதன்போதே அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, சிரேஷ்ட உப தலைவர் ராஜித சேனாரத்ன ஆகியோர் கட்சியின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என மக்கள் வலியுறுத்திவரும் நிலையில், மக்களின் கோரிக்கையை மீறி, ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் வகையில், ரணில் பதவியேற்றமை தவறு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும், புதிய அரசுக்கு ஆதரவில்லை என அறிவித்து, விரைவில் பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுவும் இன்று காலை கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது. இதன்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு ஆதரவளிக்ககூடாது எனவும், அமைச்சு பதவிகளை ஏற்கவே கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, அதாவுல்லா உள்ளிட்ட 10 கட்சிகளின் பிரதிநிதிகளும், அரசில் இணையாமல் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படப் போகிறார்கள் என அறிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பனவும் அரசில் இணைய தயாரில்லை என அறிவித்துவிட்டன.

இதற்கிடையில் அரசில் இணைவது தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்னும் அதிகாரப்பூர்வமாக முடிவெதையும் எடுக்கவில்லை. எனினும், பொருளாதாரத்தை மீட்பதற்காக ரணில் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

அநுரபிரியதர்சன யாப்பாவின் தலைமையில் இயங்கும் 8 உறுப்பினர்களின் நிலைப்பாடும் வெளியாகவில்லை.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று நாளை (14) முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியபின்னர், பொதுஜன பெரமுனவின் அரசும் கலைந்தது. இந்நிலையில் புதிய அரசை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவருகின்றார். இந்நிலையிலேயே மொட்டு கட்சி எம்.பிக்களை சந்தித்து, ஆலோசனை நடத்தவுள்ளார். நாடாளுமன்றத்தில் ரணிலுக்கு ஆதரவை வழங்குமாறு கோருவார்.

மொட்டு கட்சியினர் ஆதரவு வழங்கி, அமைச்சரவையில் இடம்பெறக்கூடும். சில தரப்பு சுயாதீனமாக இருந்து ஆதரவை வழங்கலாம். நாளை நடைபெறவுள்ள சந்திப்பே, அமையவுள்ள ஆட்சி நிலையானதா அல்லது தொங்கு நாடாளுமன்றம் தொடருமா என்பதை நிர்ணயிக்கும்.

நாடாளுமன்றத்தில் உள்ள பிரதான கட்சிகள், அரசுக்கு ஆதரவு வழங்க மறுத்துவிட்டதால் மறுபடியும் மொட்டு கட்சி உறுப்பினர்களுடனேயே ஆட்சி அமையும் நிலை உருவாகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் தற்போதைய சூழ்நிலையில், ரணிலின் அரசுக்கு 117 பேரின் ஆதரவ கிட்டலாம்.

அதன் விவரம் :-

* ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 107
* ஐக்கிய தேசியக் கட்சி - 01
* த.ம.வி.பு. கட்சி (பிள்ளையான்) - 01
* முஸ்லிம் தேசிய கூட்டணி - 01
* அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - 01
* முஸ்லிம் காங்கிரஸ் - 01
* ஈ.பி.டி.பி. - 02
* அரவிந்தகுமார் - 01
* டயானா - 01
* சாந்த பண்டார - 01
* சுரேன் ராகவன் - 01

ரணிலுக்கு ஆதரவாக (சபாநாயகர் தவிர) 117 ஆசனங்கள் உள்ளன. மொட்டு கட்சி எம்.பியொருவர் உயிரிழந்துவிட்டார். அவருக்கு பதிலாக புதியவர் அடுத்தவாரம் தெரிவுசெய்யப்படுவார்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் 65 பேர் உள்ளனர். விவரம் வருமாறு:-

* ஐக்கிய மக்கள் சக்தி - 49
* இலங்கை தமிழரசுக்கட்சி - 10
* தேசிய மக்கள் சக்தி - 03
* அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - 02
* தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி - 01

சுயாதீன அணிகளில் 42 பேர் உள்ளனர். அவர்கள் நான்கு அணிகளாகப் பிரிந்துள்ளனர்.

* சுயாதீன அணி - 01: சுதந்திரக்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பிவிருது ஹெல உறுமய, தேசிய காங்கிரஸ், எமது மக்கள் சக்தி
* சுயாதீன அணி - 02: இ.தொ. காங்கிரஸ்
* சுயாதீன அணி - 03 : அநுர பிரியதர்சன யாப்பா குழுவினர்
* சுயாதீன அணி - 04 : முஸ்லிம் எம்.பிக்கள் ('20' ஐ ஆதரித்து, பின்னர் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டவர்கள்)

இதில் இ.தொ.காவினர் ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். அநுர அணியின் முடிவு தெரியவரவில்லை

நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கு பெரும்பான்மை உள்ளதா என்பதை எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அறியக்கூடியதாக இருக்கும். பிரதி சபாநாயகருக்கான தேர்வின் போது இது புலப்படும்.

## ரணிலை நேரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன.

அதேவேளை, பிரதமர் ரணில் விரைவில் இந்தியா செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீனா உள்ளிட்ட மேலும் சில நாடுகளின் தூதுவர்களும் ரணிலைச் சந்திக்கவுள்ளனர்.

## அலரிமாளிகையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகையில் இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

## 'மொட்டு' எம்.பி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார். அதன் ஓர் கட்டமாகப் புதிய பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவர் நியமித்துள்ளார். இந்நிலையிலேயே ஜனாதிபதி நாளை மொட்டுக் கட்சி எம்.பிக்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதற்கிடையில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உட்பட சுயாதீனக் கட்சிகளின் பிரதிநிதிகள், ரணிலுக்கு ஆதரவு வழங்கக்கூடும் என அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மூவர் நாடாளுமன்றம் வருவதற்காக, 'மொட்டு'க் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பிக்கள் மூவர், தமது பதவியைத் துறக்கத் தயாராகவுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## ரணிலின் அரசில் பதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதா அல்லது இந்த விவகாரத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பன குறித்து ஆராயப்பட்டது.

இதன்போதே ரணிலின் அரசில் இணைவதில்லை எனவும், பதவிகளை ஏற்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரணிலின் அரசில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமராகப் பொறுப்பேற்றாலும் அவருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதனால் முடிந்தால் பெரும்பான்மையைக் காட்டுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுமந்திரனினது வாதம் நியாயமா?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்கள் ஆணை இல்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்து சர்ச்சைக்குரியது. அவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக இருந்தாலும் அரசமைப்பை இஷ்டப்படி வியாக்கியானம் செய்யக் கூடாது; செய்ய முடியாது.

மாவட்ட ரீதியில் தேர்தலில் நேரடியாகத் தேர்வாகாதவர் மக்கள் பிரதிநிதியாக வர முடியாது என்றால் அது இலங்கையின் அரசமைப்பிலோ அல்லது தேர்தல் சட்டங்களிலோ எழுதி இருக்க வேண்டும்.

தேர்தலையே சந்திக்காதவர்கள் – பல சமயங்களில் வெறுமனே தேசியப்பட்டியலில் பெயர் மட்டும் உள்ளவர்கள் – சிலசமயங்களில் அதிலும் கூட பெயர் இல்லாதவர்கள் – எம்.பியாக நாடாளுமன்றத்திற்கு வர சட்டம் இடம் அளித்து இருக்கின்றது; மக்கள் ஆணையைப் பெற்றவர்களாக நாடாளுமன்றத்தில் காரியமாற்ற வசதி செய்யப்பட்டு இருக்கின்றது. ஏன் 2010 முதல் 2015 வரை அத்தகைய முறையில் மக்கள் ஆணை பெற்றவராகவே சுமந்திரனும் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி உச்சமாக செயற்பட்டார். சர்வதேச ரீதியிலும் காரியங்கள் ஆற்றினார்.

தேர்தல் முடிவுகளைப் பலவிதமான கோணங்களில் – கோலங்களில் – பார்க்கலாம். விமர்சிக்கலாம். தமக்கு வசதியான முறையில் மட்டும் பார்க்கின்றார் சுமந்திரன்.

கடந்த பொதுத் தேர்தலில் ஆக 3 லட்சத்து 27 ஆயிரத்து 165 வாக்குகளை மட்டும் பெற்ற அவரது தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த ஆசனங்கள் பத்து. விழுந்த வாக்குகளின் வீதாசாரம் தேசிய அடிப்படையில் 2.82 வீதம்.

ஆனால் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழுந்த வாக்குகள் 2 லட்சத்து 49 ஆயிரத்து 435 வாக்குகள். 2.15 வீதம்.

தேசிய ரீதியில் இரண்டரை லட்சம் வாக்குகளைப் பெற்ற கட்சியின் சார்பில் அதன் தலைவர் எம்.பியாக இருப்பது மக்கள் ஆணை அல்ல என்று விமர்சித்தால், ஆக மூன்றே கால் லட்சம் வாக்குகளுடன் பத்து உறுப்பினர்களுக்கான இடத்தை எப்படி நியாயமான மக்கள் ஆணை என்று கூற முடியும்?

எப்படி ரணிலின் தெரிவு மக்கள் ஆணை அல்ல என்ற சுமந்திரனின் கருத்துத் தவறானதோ அதே போன்றதுதான் தமிழரசின் 10 பிரதிநிதித்துவ ஆணையையும் பொருத்தமற்றது என்ற நமது வாதமும் கூடத் தவறானதுதான்.

ஆனால், இப்படி எல்லாம் விரும்பியபடி திசைதிருப்பல் வாதங்களை வைக்கக்கூடாது, வைக்க முடியாது என்பதற்காக இக்கருத்தை நாமும் முன்வைத்தோம்.

69 லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் தாம் வழங்கிய அந்த ஆணையை மக்கள் திரும்பப் பெற்று விட்டார்கள், அதனால்தான் அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகிறார்கள் என்ற எங்களதும் சுமந்திரனினதும் வாதம் நியாயமானது என்றால் –

உடனடி பொதுத்தேர்தலுக்கு வாய்ப்பு இல்லாத சூழலில்–

தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து, நாடு மீளுவதற்குஸ்திரமான தலைமையும், தகுந்த வழிகாட்டலும், தேர்ந்த அனுபவமும், திறமையும் மிக்க ஓர் அரசுத் தலைவர் தேவை என்று கருதும் பொதுமக்கள், ரணிலுக்குத் தாம் வழங்கிய உள்ள ஆணையை மேலும் வலுப்படுத்த இருக்கிறார்கள் என்று நாம் ஏன் கருதக்கூடாது?

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற பஸில் வேட்பாளர் பட்டியலில் கூட பெயர் இல்லாத நிலையில் நிதியமைச்சர் ஆனபோது அதைச் சட்ட சவாலுக்கு உட்படுத்தத் தவறிவிட்டு, இப்போது ரணிலுக்கு எதிராக விதண்டாவாதம் செய்வது இளகிய இரும்பைக் கண்டு தூக்கித்தூக்கிக் குத்துவதற்கு ஒப்பானதாகும்.

முன்னர் சாணக்கியனுக்குக் குறிப்பிட்ட அதே கருத்துத்தான் இந்த விடயத்திலும். It's too much. ரணிலுக்கு எதிரான இந்த விமர்சனம், அளவுக்கு அதிகம்.

# முடியும் தறுவாயில் வெளிநாட்டு கையிருப்பு

## மத்திய வங்கி ஆளுநர் விசனம்



நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு இன்னும் ஒரு வாரத்துக்குக் கூட போதுமானதாக இல்லையென இலங்கைமத்தியவங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி இன்று தீவிரமடைந்துள்ளதாகவும், அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் கடுமையாகக் கட்டுப் படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகள், தொலைக்காட்சிகள், குளிர்சாதனப்பெட்டிகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதை முடிந்தவரை தவிர்க்குமாறு மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

மக்கள் இறக்குமதி பொருள்களை வாங்காவிட்டால், இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும் இதனால் டொலர் கையிருப்பு மிச்சமாகும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். இதேவேளை, நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலை உருவாகியுள்ள நிலையில், புதிய பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு முன்வைக்கப்படும் எனவும் எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழினப் படுகொலைகள் நினைவேந்தல் வாரமுதல்நாளில் நந்திக்கடலில் அஞ்சலி



முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதி யுத்த காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொன்றொழிக்கப்பட்ட நந்திக்கடல் பகுதியில் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாகக் கொன்று அழிக்கப்பட்டதன் நினைவாகத் தமிழினப் படுகொலை நினைவேந்தல் வாரம் வருடம் தோறும் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த காலப்பகுதியில் தமிழ் இனப் படுகொலை நடைபெற்ற பல்வேறு பகுதிகளிலும் தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் வாரத்தில் ஆரம்ப நாள் நிகழ்வுகள் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்றிருந்தன.

இதேவேளை நேற்று முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாகக் கொன்று அழிக்கப்பட்ட போது உணவின்றி தவித்த வேளையில் அவர்களுக்கு உயிர் காத்த உணவாகிய கஞ்சி வழங்குகின்ற நிகழ்வுகளும் முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு,கிழக்கின் பல்வேறு மாவட்டங்களிலும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்ப நிலை!

நாட்டில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திடீரென மக்கள் கூடியமையால்அங்குபதற்றமானசூழல்நிலவியுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) மாலை ஊரடங்கு காலப்பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அவசர சேவைகளுக்கு என எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) மாலை 2 மணியுடன் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற சிலருக்கு நேற்று மாலை அவசர நிலையை கருத்தில் கொண்டு வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கப்பட்டது. இந்த நிலையில் காலை முழுவதும் காத்திருந்து எரிபொருள் கிடைக்காதவர்கள் மாலை நேரம் எரிபொருள் பெற முயன்ற போது, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சாதாரண நேரங்களில் எரிபொருள் நிரப்ப சென்றால் எரிபொருள் இல்லை இல்லை என ஊழியர்கள் தெரிவிக்கின்றனர் எனவும், நள்ளிரவு நேரங்களில் சில தனியார்களுக்கு அதிக விலையிலும் அதிக அளவிலும் எரிபொருள்களை வழங்குகின்றனர் எனவும் கூறி மக்கள் முரண்பட்டுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், பொது மக்களுடன் கலந்துரையாடி மக்களை கலைந்து செல்லுமாறு எச்சரித்த நிலையில் அனைவரும் கலைந்து சென்றுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்ய தாக்குதலால் உக்ரைனில் இருந்து 60 லட்சம் பேர் வெளிநாட்டில் தஞ்சம்

## 1.4 கோடி பேர் வீடுகளை விட்டு வெளியேறினர்



போரில் 26 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டனர் என உக்ரைன் தெரிவித்துள்ளது. நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர கடும் எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யா, அந்நாட்டின் மீது படையெடுத்துள்ளது. ரஷ்ய தாக்குதலை அடுத்து உக்ரைனில் இருந்து 60 லட்சம் மக்கள் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்திருக்கின்றனர் என ஐ.நா. மனிதஉரிமைஅமைப்புதெரிவித்துள்ளது. இதில் 90 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என அந்த அமைப்பு கூறியுள்ளது. மேலும் ஒரு கோடியே 40 லட்சம் உக்ரைன் நாட்டு மக்கள்வீடுகளைவிட்டுவெளியேறிவிட்டனர் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையே ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் பேசிய இந்திய தூதர் ரவிந்திரா, இருநாட்டு போரில் இந்தியா அமைதி மற்றும் தீர்வு காண வலியுறுத்தியதாக கூறினார். அப்பாவி மக்கள் உயிரிழப்பதை தவிர்க்க இந்தியா முயற்சி எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே மரியுபோல் இரும்பு ஆலையில் சிக்கிய உக்ரைன் ராணுவ வீரர்களும், பொதுமக்களும் அங்கிருந்து வெளியே வர முடியாமல் தவித்து வருகின்றனர். ஏராளமானோர் கை, கால்களை இழந்து அவதிப்பட்டு வரும் வீடியோக்களும், படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. ரஷ்யாவின் தாக்குதலுக்கு சற்றும் சளைக்காத உக்ரைன் ராணுவத்தினர், ரஷ்யாவின் இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். ராணுவஹெலிக்கொப்டர்கள், கவச வாகனங்களை உக்ரைன் ராணுவத்தினர் ஏவுகணை வீசி தாக்கி உள்ளனர். இதனிடையே ரஷ்ய ராணுவ வீரர்கள் 26,000 பேர் போரில் கொல்லப்பட்டனர் என உக்ரைன் ராணுவத்தினர் தெரி வித்துள்ளனர். ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நிச்சயமாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம் என உக்ரைன் ராணுவத்தினர் கூறி யுள்ளனர்.

## அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டதை தொடர்ந்து வடகொரியாவில் முதல் கொரோனா உயிரிழப்பு

### 1.87 லட்சம் பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்



வடகொரியா நாட்டில் கொரோனாத் தொற்றால் முதல் முறையாக ஒருவர் உயிரிழந்துள்ளார். வடகொரியாவில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 6 பேரில் ஒருவருக்கு ஒமிக்ரோன் வகை கொரோனா பாதித்துள்ளது. இதனை அடுத்து 1,87,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2019ம் ஆண்டு இறுதி முதல் உலகம் முழுவதும் தீவிரமாக பரவிய கொரோனா தொற்று இன்று கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. கொரோனாவுக்கு எதிராக திவீரமாக உலக நாடுகள் தடுப்பூசியை செலுத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றன. வடகொரியா அரசு தனது நாட்டில் கொரோனா தொற்று இல்லை என மறுத்து வந்தது.

இந்நிலையில் தற்போது அந்நாட்டில் நேற்று முதல் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக வடகொரிய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இதையடுத்து நாடு முழுவதும் கடுமையான தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டு, ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

நமது தேசத்தில் ஒமிக்ரோன் வைரஸ் சத்தமில்லாமல் நுழைந்துவிட்டது. இதையடுத்து நாடு முழுவதும் தேசிய அவசர நிலை அறிவிக்கப்படுகிறது. நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஊரடங்கு அறிவிக்கப்படுகிறது. இதன் மூலம் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அனைத்து கதவுகளும் அடைக்கப்படுகிறன என வடகொரியா அதிபர் கிம் கூறியிருந்தார்.

இதனை தொடர்ந்து இன்று வடகொரியாவில் முதல் கொரோனா உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது. வடகொரியாவில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 6 பேரில் ஒருவருக்கு ஒமிக்ரோன் வகை கொரோனா பாதித்துள்ளது. இதனனை அடுத்து 1,87,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என வடகொரியா அரசு தெரிவித்துள்ளது.

## ஒட்சிசன் இல்லாத இடத்தில் தாவரங்கள் வளர்வது சாத்தியமாம்



சந்திரனில் இருந்து மனிதர்களால் பூமிக்கு கொண்டுவரப்பட்ட மண்ணில் தாவரங்கள் வளரும் என்பதை புளோரிடா விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள். பிராணவாயு இல்லாத நிலவின் நிலப்பரப்பில் தாவரங்கள் வளருமா என்பது குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழக ஆய்வாளர்கள், கடந்த ஆண்டு அதற்கான ஆராய்ச்சிகளை தொடங்கினார்கள். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, பல்வேறு காலகட்டத்தில் நிலவில் இருந்து பூமிக்கு கொண்டுவந்த மண்ணில் மாற்றம் ஏதும் செய்யாமல் சிறிய குடுவைகளில் வைத்து அதில் விதைகளை பதித்து பல்கலைக்கழக நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் விதமாக விதைகள் அனைத்தும் முளைக்க தொடங்கியுள்ளன.

ஆனால் பூமியில் உள்ள தாவரங்களை போல் இல்லாமல் சந்திர மண்ணில் முளைத்த செடிகள், வளர்ச்சி குன்றி காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இருப்பினும் இதுபோன்ற சோதனைகளை தொடர்ந்து மேற்கொள்ள புளோரிடா பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இந்த சோதனை மூலமாக நிலவில் ஓரளவுக்கு தாவரங்கள் வளர முடியும் என்று நிரூபிக்கப்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சந்திரனுக்கு வீரர்கள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வரும் நிலையில், இதுபோன்ற ஆய்வுகள் எதிர்காலத்தில் நிலவில் ஒட்சிசனை உருவாக்குதல் குறித்த ஆராய்ச்சிக்கு பயன்தரும் என விண்வெளி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## டுவிட்டர் நிறுவனத்தின் அதிகாரிகள் பதவி விலகல்

### மஸ்க் பொறுப்பேற்ற பின்



டுவிட்டர் நிறுவனம் எலன் மஸ்க் வசம் செல்வதால் அந்த நிறுவனத்தில் இருந்து 2 உயர் அதிகாரிகள் பதவி விலக உள்ளனர். ஆய்வு பிரிவில் பொது மேலாளராக உள்ள கைவோன் பெக்போர், அதிகாரி புரூஸ் பாக் ஆகியோர் வெளியேறுகின்றனர்.



## ரஷ்யா போர் காரணமாக உக்ரைனில் இருந்து இதுவரை 60 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம்

ரஷ்யா போர் காரணமாக உக்ரைனில் இருந்து இதுவரை 60 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். 60 லட்சம் பேரில் பெரும்பாலானவர்கள் அண்டை நாடுகளில் தஞ்சம் அடைந்துவிட்டனர். இந்த 60 லட்சம் பேரில் 90 சதவிகிதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஐ.நா. அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

# கட்டாய மதமாற்றத்தைத் தடை செய்ய கர்நாடகாவில் அவசரச் சட்டம் வருகிறது



பா.ஜ.க. ஆட்சி செய்து வரும் கர்நாடக மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் கட்டாய மதமாற்றம் நடைபெறுவதாகவும், இதைத் தடுக்கசட்டம்கொண்டுவரப்படும் என்றும் அம்மாநில முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தெரிவித்திருந்தார்.

அதன்படி, கட்டாய மதமாற்றத்தை தடுக்கும் வகையில் கர்நாடக மத சுதந்திர உரிமை பாதுகாப்பு மசோதா, அம்மாநில சட்டசபையில் கடந்தாண்டு டிசெம்பரில்நிறைவேற்றப்பட்டது.

இதன்படி இந்த சட்டத்தை மீறுபவர்களுக்கு 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், 25 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படும். இந்த சட்ட மசோதாவிற்கு காங்கிரஸ் மற்றும் மதசார்பற்ற ஜனதா தளம் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனால், கர்நாடகா சட்ட மேலவையில் இந்த மசோதாவை ஆளும் கட்சியால் நிறைவேற்ற முடியவில்லை.

இந்தநிலையில், கர்நாடகா முதலமைச்சர் பசவராஜ் பொம்மைதலைமையில்நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அவசரச் சட்டம் கொண்டு வர ஒப்புதல்வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடகா சட்டத்துறை அமைச்சர் மதுசுவாமி, தற்போது சட்ட சபைக் கூட்டத் தொடர் இல்லாததால் அவசரச் சட்டத்தை அமுல்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது, என்று தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் சட்ட சபையில் நிறைவேற்றிய சட்ட மசோதாவில் உள்ளபடி எந்த திருத்தமும் இல்லாமல் அது அவசரச் சட்டமாக மாற்றப்படும் என்றும், அடுத்த கூட்டத் தொடரில் அவசரச் சட்ட அரசாணை சட்ட மேலவையில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும், என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## காங்கிரஸ் சிந்தனை அமர்வு மாநாட்டில் பங்கேற்க ராகுல் காந்தி ரயில் மூலம் உதய்பூர் பயணம்



காங்கிரஸ் கட்சியை மறுசீரமைப்பு செய்வது தொடர்பாகவும் அடுத்து நடைபெறவுள்ள தேர்தல்களுக்கான உத்திகளை வகுப்பது தொடர்பாகவும் ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பங்கேற்கும் மூன்று நாள் சிந்தனை அமர்வு மாநாடு இன்று தொடங்குகிறது.

இதில் கட்சியின் இடைக்காலத் தலைவர் சோனியா உட்பட 430 மூத்த நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர். ராகுல் காந்தியை மீண்டும் கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

சிந்தனை அமர்வு மாநாட்டைத் தொடங்கி வைத்து சோனியாகாந்தி இன்று உரை நிகழ்த்துகிறார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ராகுல்காந்தி, டெல்லியில் இருந்து உதய்பூருக்கு ரயிலில் பயணம் மேற்கொண்டார்.

இதற்காக, டெல்லி சராய் ரோஹில்லா ரயில் நிலையத்திற்கு அவர் நேற்று வந்தபோது அவரை வழியனுப்பி வைக்க ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் ரயில் நிலையத்தில் கூடியிருந்தனர்.

## சத்தீஸ்கர் மாநிலத்தில் ஹெலிக்கொப்டர் விபத்து

### இரண்டு விமானிகள் உயிரிழப்பு



சத்தீஸ்கர் மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர், ராய்பூரில் உள்ள சுவாமி விவேகானந்தர் விமான நிலையத்தின் அருகே நேற்றிரவு விபத்துக்குள்ளானது.

கீழே விழுந்து நொறுங்கிய அந்தஹெலிக்கொப்டரில்இருந்த விமானிகளான கிருஷ்ண பாண்டா, ஏ.பி.ஸ்ரீவஸ்தவா ஆகியோர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்தனர்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக் குறித்து தமது டுவிட்டர் பதிவில் வேதனை தெரிவித்துள்ள சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல், உயிரிழந்த விமானிகளின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், உடனடியாக இழப்பு ஏற்பட்டவர்களது குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கும்படியும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஹெலிக்கொப்டர் விபத்துக் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஹெலிக்கொப்டர் விபத்தைச் சந்தித்ததாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## இந்தியாவில் சற்று அதிகரித்த தினசரி கொரோனாப் பாதிப்பு



இந்தியாவில் ஒரே நாளில் 2,841 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது. இன்று காலை வரையான 24 மணி நேரத்தில் 2,841ஆக தொற்றுப் பாதிப்பு உயர்ந்துள்ளது.

இதேவேளை, இந்தியாவில் ஒரே நாளில் 3,295 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 4,25,70, 165 லிருந்து 4,25,73,460 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியா முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 19,067லிருந்து 18,604 ஆகவுள்ளதாகவும், கொரோனாவுக்கு ஒரே நாளில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமாக கொரோனாவால் 5,24,190 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிநாடு செல்பவர்கள் பூஸ்டர் டோஸ் செலுத்திட 9 மாதம் காத்திருக்க தேவையில்லையென அறிவிப்பு



இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள்பூஸ்டர்டோஸ்தடுப்பூசிசெலுத்திக்கொள்வதற்கு முன்னர் போன்று 9 மாதங்கள் காத்திருக்கத் தேவையில்லை என்று இந்திய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்திய குடிமக்கள், எந்த நாட்டுக்குச் செல்கிறார்களோ அந்த நாட்டின் பயண வழிகாட்டு விதிமுறைகளின்படி உடனடியாக முன்னெச்சரிக்கையாக பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்தி கொள்ளலாம். இந்த புது வசதி கோவின் இணையத்தளத்தில் விரைவில் கிடைக்கும். தற்போது இந்தியா முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தனியார் தடுப்பூசி மையங்களில் பூஸ்டர் டோஸ் போடப்படுகிறது. எனினும், இரண்டாவது டோஸ் போட்டுக் கொண்ட பெரியவர்கள், முன்னெச்சரிக்கையாக பூஸ்டர் டோஸ் போடுவதற்கு 9 மாத இடைவெளி இருக்க வேண்டும், என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. ஆனால், தற்போது வெளிநாடு செல்பவர்கள் 9 மாதம் காத்திருக்க தேவையில்லை.

மத்திய அரசின் புள்ளிவிவரப்படி 18 வயது முதல் 59 வயது வரை உள்ள 12.21 லட்சம் பேருக்கு பூஸ்டர் டோஸ் போடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

# ஏறாவூரில் ஆடைத் தொழிற்சாலைகளின் பணியாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்





ஏறாவூர், புன்னைக்குடா வீதியை அண்டி அமைந்துள்ள மூன்று ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் சுமார் ஐந்நூறு பேர், நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மூன்று ஆடைத் தொழிற்சாலைகளும் கடந்த செவ்வாய்க்கிழமை வன்முறைக் கும்பலால் தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளன.

அங்கிருந்த அதி நவீன ஆடைத் தொழில் இயந்திரங்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் உட்பட ஏனைய உபகரணங்களும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் வியாழக்கிழமை தளர்த்தப்பட்டதையடுத்து ஆடைத் தொழிற்சாலைக்கு மீண்டும் பணிக்குத் திரும்பிய பணியாளர்கள், தொழில்சாலை சேதமாக்கி அழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, சம்பந்தப்பட்ட வன்முறையாளர்களைக் கைது செய்யுமாறு கோரி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

நீதி நிலைநாட்டப்பட வேண்டும், ஏழைகளின் வாழ்வாதாரத்தை அழித்தொழிக்கும் வன்முறையாளர்களை கைது செய், அரசியலுக்கும் ஆடைத் தொழிற்சாலைக்கும் வித்தியாசம் தெரியாதா? உள்ளிட்ட பல கோஷங்களை எழுப்பினர்.

போராட்ட இடத்துக்கு வந்த பொலிஸாரும் படையினரும் போராட்டக்காரர்களின் கோரிக்கையை ஏற்கின்றோம் எனவும் முன்னதாகவே வன்முறையில் ஈடுபட்டோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனவும் தெரிவித்தனர். மேலும் பலரைக் கைது செய்யும் தமது நடவடிக் கைக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து கவனவீர்ப்புப் போராட்டக்காரர்கள் தமது தொழிற்சாலைகளுக்குச் சென்றனர்.

# ஊரடங்கில் போதைப் பொருளை கடத்திய நான்கு பேர் சிக்கினர்

(க.கிருபாகரன்)





ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் கல்முனையிலிருந்து காத்தான்குடிப் பிரதேசத்துக்கு ஓட்டோ மற்றும் கார் ஆகியவற்றில் ஐஸ் போதைப் பொருளைக் கடத்திச் சென்ற கணவன், மனைவி உட்பட நான்கு பேரை நேற்று மாலை தாங்கள் கைது செய்தோம் எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறியின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் வை.விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஆரையம்பதி 5ஆம் கட்டைச் சந்தி பொலிஸ் சோதனைச் சாவடியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கல்முனையிலிருந்து காத்தான்குடி நோக்கிப் பயணித்த நீலநிற ஓட்டோவைச் சோதனையிட்டபோது, அதில் இருந்த கணவனிடம் ஒரு கிராம் ஐஸ் போதைப் பொருளும், மனைவியிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப் பொருளும், அவர்களது நண்பரிடமிருந்து ஒன்றரை கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டு, அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை பொலிஸாருக்குக் கிடைத்த மற்றொரு தகவலுக்கமைய கல்முனையிலிருந்து காத்தான்குடிக்கு ஐஸ் போதைப் பொருளைக் காரில் கடத்திச் சென்ற நபரை காத்தான்குடி டிப்போச் சந்தியில் மடக்கிப் பிடித்துச் சோதனையிட்டபோது, அந்நபரிடமிருந்து ஒன்றரைக் கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டமையுடன், அந்நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்விதம் இருவேறு சம்பவங்களிலும் கைது செய்யப்பட்ட நால்வரையும் மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது இவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



# கல்முனையில் கடல் நீர் புகுந்ததால் அன்பு இல்லப் பயிர்செய்கை பாதிப்பு

கல்முனையில் திடீரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக கடல் நீர் உட்புகுந்ததால் கல்முனை விவசாய விரிவாக்கல் பிரிவில் பயிரிடப்பட்ட உளுந்து மற்றும் நிலக்கடலை என்பன பாதிக்கப்பட்டன என விவசாயிகள் தெரிவித்தனர்.

கல்முனை அன்பு சகோதர இல்லத்தில் சுமார் அரை ஏக்கரில் பயிரிடப்பட்ட நிலக்கடலை, சுமார் ஒன்றரை ஏக்கரில் பயிரிடப்பட்ட உளுந்து செய்கைக்குள்ளும் கடல் நீர் உட் புகுந்த நிலையில் செய்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக அம்பாறை மாவட்ட மறு பயிர் செய்கை விவசாய பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.எச். ஏ. நிஹார், கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் பிரதம போதனாசிரியர் எஸ்.கிருத்திகா, கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் விவசாய போதனாசிரியர் என்.யோகலக்ஷ்மி ஆகியோர் நேற்றுக் கள விஜயம் செய்து, விவசாயிகளுக்கு தேவையான வழிகாட்டலையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

உளுந்து, நிலக்கடலை என்பன பயிரிடப்பட்டு சுமார் 35 நாள்கள் கடந்த நிலையில் மேலும் சுமார் ஒன்றரை மாதத்துக்குள் அறுவடை செய்யப்படவிருந்தபோது இக்கடற்கொந்தளிப்புக் காரணமாக பயிரிடப்பட்ட பகுதிகளுக்கு கடல் நீர் உட்புகுந்ததாக விவசாயிகள் மேலும் தெரிவித்தனர்.

# பொது இடங்களில் கழிவுகள் கொட்டுவோரை மடக்கத் தயாராகிறது கல்முனை மாநகர சபை

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டி, சூழலை மாசுபடுத்தும் நபர்களைக் கைது செய்து, தண்டிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அட்டாளைச்சேனை, பள்ளக்காடு பகுதியில் அமைந்துள்ள திண்மக்கழிவகற்றல் நிலையம் வழமை போன்று தொழிற்படவில்லை. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் மாற்று ஏற்பாடுகளை மேற் கொண்டு, திண்மக் கழிவகற்றல் சேவையை சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில், சாய்ந்தமருது கரைவாகு பொலிவேரியன் வீட்டுத்திட்டத்தை சூழவுள்ள குளங்கள், கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத் திட்டத்திற்கு பின்னாலுள்ள ஆற்றங்கரைப் பகுதிகள் மற்றும் தோணாப் பகுதிகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஆடு, மாடு மற்றும் கோழிக் கழிவுகளையும் இதர குப்பைகளையும் கொட்டி வருகின்றனர்.

மாநகர சபையின் வர்த்தக அனுமதிப் பத்திரம் பெற்ற கோழிக்கடைகளில் சேர்கின்ற கோழிக்கழிவுகள் தினமும் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பிரத்தியேக திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே மாநகர சபையின் வர்த்தக அனுமதிப்பத்திரம்பெற்றமாட்டிறைச்சிக்கடைகளுக்கான மாடுகள், விலங்கறுமனைகளில் அறுக்கப்படுவதனால், அக்கழிவுகளும் முறையாக அகற்றப்பட்டு வருகின்றன.

ஆனால், அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக நடத்தப்படுகின்ற கோழிக் கடைகளினதும் தனி நபர்களினதும் கோழிக் கழிவுகளும் வீடுகளிலும் அங்கும் இங்குமாகவும் சட்டவிரோதமாக அறுக்கப்படும் ஆடு, மாடுகளின் கழிவுகளுமே மேற்படி நீர்நிலைகளில் கொட்டப்படுவதாக அறிய முடிகின்றது. அத்துடன், வீடுகளில் அன்றாடம் சேர்கின்ற கழிவு களையும் சிலர் பொறுமையில்லாமல் உடனுக்குடன் இவ்வாறான நீர்நிலைகளிலும் தெருக்களிலும் பொது இடங்களிலும் வீசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழட்டு மைனாவுக்கு பதில் கிழட்டு கோழி!

## பின்னணியில் ஏகாதிபத்திய சூழ்ச்சி என்கிறார் புபுது ஜாகொட



பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவது நிலவும் நெருக்கடியை அதிகரிக்குமே அன்றி தீர்வாக அமையாது என்பதால், ஜனாதிபதி பதவி விலகும்வரை கோட்டாகோகமபோராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல ஆதரவு வழங்க போவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நேரத்தில் கிழட்டு மைனாவை விரட்டி விட்டு கிழட்டு கோழியை கொண்டு வரும் முயற்சியின் பின்னால், ஏகாதிபத்திய சூழ்ச்சிகள் இருக்கின்றன.

மார்ச் 20 ஆரம்பித்த கதையின் காட்டி கொடுப்பையே இவர்கள் செய்கின்றனர். ஐந்து முறை பிரதமராக பதவி வகித்து தோல்வியடைந்த தலைவர் ஒருவரை மீண்டும் நியமிப்பது திறந்து பார்த்த பையை மீண்டும் திறந்து பார்ப்பது போன்றது.

ஜனாதிபதி மூழ்கப் போகும் நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க என்ற கொடியை பிடித்து தொங்க பார்க்கின்றார். தற்போது இவர்கள் இருவரும் மூழ்கப் போவதைக் காணமுடியும்.

சட்டவிரோதமாக ஒன்றுகூடியவர்களை கைது செய்ய வேண்டுமாயின் கடந்த 9 ஆம் திகதி அலரி மாளிகையில் சட்டவிரோதமாக ஒன்று கூடி ஆரம்பித்தவர்களை கட்டாயம் கைது செய்ய வேண்டும் எனவும் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக பதவி விலக முடியாது என்று கூறிய ஜனாதிபதி, கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் அமர்த்துவதற்கு எவ்வாறு முயற்சி செய்கின்றார் எனவும் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு பதிலாக ரணில் விக்கிரமசிங்க தற்போதைய பிரச்சினையை தீர்க்க முடியாது என வலியுறுத்திய ஜாகொட, இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தினால் கோட்ட கோ கம, பின்னர் மைனா கோ கம, இறுதியாக ஹொரு கோ கமவை ஸ்தாபித்தவர்கள் இறுதியில் ரணில் கோ கமவை ஸ்தாபிப்பார்கள் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இடைக்கால ஒருமித்த அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கான பிரேரணையை முன்வைத்து, மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து இடைக்கால அரசாங்கம் தேர்தலை நடத்துவது உள்ளிட்ட மக்களின் கோரிக்கைகளை உள்ளடக்கிய மாநாட்டை உருவாக்குவதற்கான பிரேரணையை முன்வைத்ததாக ஜாகொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை இராஜினாமா செய்யும்படி கேட்டபோது, அவர் எப்போதும் மக்களால் பதவிக்கு வந்தார் எனவும், அதனால் தான் பதவி விலக முடியாது என்றும் கூறினார். இதனைக் கூறிய ஜனாதிபதியே கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் பிரதமராக்குகிறார். இந்த தீர்மானத்துக்கு ஜனாதிபதி விளக்கம் அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

# வன்முறை ஏற்புடையது அல்ல தமிழ் மக்கள் ரசிக்கக்கூடாது!

## வி.எஸ்.சிவகரன் கோரிக்கை



அமைதி வழி போராட்டத்தை அரசியல் பின்புலத்துடன் அரச இயந்திரத்தின் ஒத்திசைவுடன் நசுக்க முனைவது ஜனநாயக படுகொலை ஆகும். இந்தச்செயற்பாட்டைவன்மையாகக்கண்டிப்பதுடன் ஆழ்ந்த கவலையடைகிறோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்–

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அரசமைப்பின் பிரகாரம் ஜனநாயக உரிமை பண்பியல்புகளுக்கு மதிப்பளித்து முதன்மைப்படுத்த வேண்டியது தார்மீக பொறுப்பும் அடிப்படை உரிமையும் ஆகும்.

இந்த மரபைக் காக்க வேண்டியது ஆட்சியாளரின் இரகசியப் பிரமாணமும் ஆகும். அவ்விதமான நெறிமுறையை அவமதிப்பது சம நீதியின்மையற்ற செயலில் ஈடுபட்டது பெரும் தேச விரோத குற்றமாகும். வன்முறையின் வலிகளை நன்கு உணர்ந்தவர்கள் என்ற வகையில் முன்னெச்சரிக்கையுடன் சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்ள முனைவது சிறந்த ஜனநாயக தலைமைத்துவப் பண்பியலாகும். அவசரக் கால சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்க முனைவதும், முப்படைக்குச் சுடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதும், ஜனநாயக நாட்டுக்கு உகந்தவை அல்ல. பொருளாதார நலிவடைவில் இருந்து நாட்டை மீட்சி அடைய வழி தேடுவதை விடுத்து வன்முறையை ஆயுதமாக்குவது மேலும் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு நலிவடையும்.

இதை ஆட்சியாளர்கள் புரியாமல் இருக்கின்றமை மிகுந்த மன வேதனை அளிக்கிறது. யுத்த வெற்றியின் யுக புருஷர்கள் எனக் கொண்டாடிய இதே பௌத்த தேசியவாத இனவாதிகள் அதே மே மாதத்தில் கூட்டுக் கோபத்தை உச்சபட்சமாக வெளிப்படுத்துவது ‘ஆறி நின்றது அறனன்று’ என்பதைப் புலப்படுத்துகிறது.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை. இந்தப் போராட்டக்காரர்கள் தமிழர்களின் எந்த விதமான அடிப்படை கோரிக்கையும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள். போர்க்குற்றவாளிகளுக்கு இது தண்டனை ஆகாது. நாம் எள்ளளவும் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்கள் துளியளவும் இதில் மகிழ்வடைய முடியாது.

இது அவர்களுடைய உள்ளக அரசியல் பிரச்சினை. இதை நாம் மூன்றாம் தரப்பாகவே மிகத் தந்திரமான மதிநுட்பத்துடன் கையாள வேண்டும். எனவே தெற்கில் புதிய அரசியல் கலாசாரம் உருவெடுப்பது போல் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தங்கள் செயற்பாட்டை மீள் பரிசீலனை செய்து கொள்ள வேண்டும்.

உருப்படாத உணர்ச்சிகரமான வார்த்தைகளைப் பேசி தமிழ் மக்களை உசுப்பேற்றி உண்மையின் நிழல் படாத பொய்யை உரத்துப் பேசி காலத்தை வீணாக்கியதைத் தவிர அவர்களின் சாதனை வெறும் பூச்சியமே எனப் பொதுமக்கள் விசனம் அடைகின்றனர்.

தூர நோக்கு இலக்கின்றி இராஜ தந்திர இராஜீக அணுகுமுறை இன்றி வெறும் வாக்கு வணிக வாய்ச்சொல்லில் வீரர்களாகவே காணப்படுவதுடன் தமிழ் மக்களின் பொது நலன் சார்ந்து இந்த இக்கட்டான நிலையில் கூட ஐக்கியப்படாமல் ஆளுக்கு ஒரு அறிக்கை விட்டு அநாகரிக அரசியலில் ஈடுபடுகிறார்கள்.

ஆகவே தமிழ் மக்களும் புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டமைக்க நகர வேண்டிய காலம் கைகூடி வருவதாகவே தோன்றுகிறது. ஆகவே, தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் உணர்ச்சிவசப்படாமல் மிக மிக நிதானமாகக் கூர்ந்து கவனித்து மிக எச்சரிக்கையுடன் கையாள வேண்டும். ஏனெனில் பலமுறை இனக்கலவரம், இனப்படுகொலை என்பனவற்றில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அந்த அனுபவத்திலிருந்து எமது முன்னோக்கிய நகர்வு கட்டமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். – இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாட்டில் மருந்துகள் தட்டுப்பாடு நோயாளிகள் பலர் உயிரிழப்பு

இலங்கையில் உள்ள பல வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை, அவசர சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள், இரசாயனங்கள் பற்றாக்குறையால் பல நோயாளிகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டணி தெரிவித்துள்ளது.

பல வைத்தியசாலைகளில் மருத்துவர்கள் இது தொடர்பில் தங்களுக்கு அறிவித்துள்ளனர்எனகூட்டணியின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறை தீவிரமடையும், இதுவரை சந்திக்காத அளவு நோயாளிகளின் உயிருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். ஒரு முக்கியமான கட்டத்தில் சுகாதாரத் துறையை நிறுத்தும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டிலுள்ள நிலைமை நீடித்தால் அடுத்து வரும் நாள்கள் மிகவும் பயங்கரமாக இருக்கும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தால் வீரசிங்க எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரண தர பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்கு தடை

*க.பொ.த சாதாரண தர பரீட்சையுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை, எதிர்வரும் 23 ஆம் திகதி முதல், ஜூன் மாதம் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.*

*இந்த தடை உத்தரவை மீறினால் பரீட்சை சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.*

*மேலும் சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருக்கின்றன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2022இல் வெளியிடப்பெற்றது.